**MCOP NO:2616/2019 DATE:22.01.2024**

ம.சா.1

பெயர்.Manos prasanna

த/பெ.திரு.Anthonimuthu

வயது. 32

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 10 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

18.01.2019 அன்று மாலை 5 மணியளவில் விபத்து நடந்தது. புகார் நான் தான் கொடுத்தேன், அது மசாஆ 1 ஆகும். புகார் 19.01.2019 அன்று இரவு 7 மணிக்கு புகார் பதிவு செய்யபட்டது என்றால் சரிதான். புகாரில் பதிவு எண் தெரியாத வாகனம் தான் இந்த விபத்திற்கு காரணம் என்று நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த பதிவு எண் கொண்ட வாகனம் தான் என்னை இடித்தது என்று எழுத்துபூர்வமாக எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். மசாஆ 4 ல் TN05BT2158 என்ற வாகனம் என் மீது மோதியதாக குறிப்பு உள்ளது, அது எவ்வாறு கண்டுபிடிக்கபட்டது என்ற குறிப்பு இல்லை. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் இந்த விபத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் ஒட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கும் இன்னொரு இருசக்கர வாகனத்திற்கு தான் விபத்து ஏற்பட்டது. எனக்கு தெரிந்த இன்னொரு இருசக்கர வாகனத்தின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யபட்டு தவறான நோக்கத்தில் இந்த மனு தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வேலை, வருமானம் குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டது என்றும், நான் கூறுவது போல் ஊனங்கள், பாதிப்புகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகைக்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்பதால் அது எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மசாஆ 3ன் படி 1ம் எதிர்மனுதாரர்

வாகனம் ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் இந்த வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க எந்த பொறுப்பும் ஆகமாட்டார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.